[1971 டிசம்பர் 18

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரம் இல்லை. சில விற்பனையாளர்கள் சரியாகப் பணம் திரட்டி, செலுத்தாவிட்டால் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்காமல், அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவற்றை எடுத்திருக்கிறது. டலரிடத்திலிருந்து முன்கூட்டியே டிபாசிட் வாங்கியிருக்கிறோம். டிபாசிட் தொகையை எடுத்துக்கொண்டு, அதற்கு மேலே பணம் வரவேண்டியிருந்தால், அதை வசூலிக்க வழக்குத் தொடருதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்திவிட்டார்கள். ஒரு சிலர்தான் உரிய காலத்தில் பணம் கட்டவில்லை. அவர்களுக்கு மேற்கொண்டு அந்த உரிமை வழங்கப் படவில்லை.

மேயர் தேர்வு

* **551 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வகுப்புவாத பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு புதிய மேயரைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைப் பழக்கம் மதுரை மாநகராட்சியிலும் அனுசரிக்கும் உத்தேசம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லா நகராட்சி களிலும் இம்மாதிரி ஆண்டுக்கு ஒரு முறை நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கூட மேயர் தேர்தலில் வகுப்புவாரி அடிப் படையில் ஆண்டுக்கு ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது சட்டதிட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை. சென்னை மாநக ராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டத்தில் கூட அப்படிப்பட்ட வகையில் சட்டம் ஒன்றும் இல்லை. அது ஒரு கன்வென்ஷன், மரபு என்ற முறையில்தான் நடத்தப் பட்டு வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட முறை சிலபல நகராட்சி மன்றங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. திண்டுக்கல்லிலும், வாணியம்பாடியிலும் ஒரு தடவை ஹிந்து மதத்தைச் சார்ந்தவர் நகராட்சித் தலைவராக இருந்தால், அடுத்த தடவை முஸ்லீம் வகுப்பைச் சார்ந்தவர் தலைவராக வரவேண்டுமென்று மரபு இருக் கிறது. சட்டத் திட்டத்தை ஒட்டி அல்ல. மரபை ஒட்டித்தான் அப்படி நடக்கிறது.